TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8069819

C

01/AC/2021/TVL

1. District மாவட்டம் : Thiruvallur | PS: காவல்நிலையம் V&AC, Thiruvallur | Year ஆண்டு: 2021 | FIR No.: மு.த.அ. எண் | Date: நாள் 29-01-2021

2. (i) Act சட்டம்: The Prevention of corruption Act - 1988 (as Amendment in 2018) | Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 12-01-2021 at | Date to : நாள் வரை 25-01-2021 at
Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் 12.00 hrs | Time to : நேரம் வரை 12.50 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 29-01-2021 | Time : நேரம் 08.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 29-01-2021 | Time : நேரம் 08.30 hrs. 09.30 hrs.

Seen
[illegible]
29.01.2021

Seen
[illegible]
29.01.2021

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் North West - About 22 Kms.
Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி Office of the Village Administrative, Vellathukottai Village, Uthukottai Taluk, Thiruvallur District.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. G. Moorthy | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Gopal.
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 47/2021 | (d) Nationality நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation தொழில் Pattern Master Gupta & Company of Alandur. | (g) Address முகவரி No: 3/48, Subramaniya Nagar, Iyyappan thangal, Karaimathur, Kanchipuram District, Chennai-56.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. Mohana priya
Village Administrative Officer,
Vellathukottai Village, Uthukottai Taluk,
Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

*Deemand bribe amount Rs. 10.000/-*

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

*திருமதி. மோகன பிரியா,*
*கிராம நிர்வாக அலுவலர்,*
*வெள்ளாத்துக் கோட்டை.*
*ஊத்துக்கோட்டை-தாலுகா*
*திருவள்ளூர் - மாவட்டம்.*

*பணிந்து அனுப்பப்பட்டது.*

*இன்று 29.01.2021-ம் தேதி காலை சுமார் 08.30 மணியளவில் திருவள்ளூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் ஜி. கார்த்திக், காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்த போது, சென்னை-56, காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், அய்யப்பன் தாங்கல், எண். 3/148, சுப்பிரமணிய நகரைச் சேர்ந்த திரு. ஜி. மூர்த்தி, வ/47, த/பெ. கோபால் என்பவர் ஆஜராகி என்னிடம் கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு:-*

*Separate Sheets Attached.*

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed *G. KARTHIK*... Rank *Insp. of Police* to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

*G. Moorthy*

*[signature] 29/01/2021*

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

*29.01.2021 at 11.50 hrs.*

Name: பெயர் *G. KARTHIK*..........
Rank: நிலை ..................No. எண் ..........
*Inspector of Police.*
*V&AC, Thiruvallur.*

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2021/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

அனுப்புநர், G.மூர்த்தி, ஆ/வ.47, த/பெ.கோபால், எண்.3/148, சுப்பிரமணிய நகர், அய்யப்பன்தாங்கல், குன்றத்தூர், காஞ்சிபுரம் மாவட்டம், சென்னை-56. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்டம். அய்யா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். எனக்கு சொந்த ஊர் திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை தாலுக்கா, வெள்ளாத்துக்கோட்டை கிராமம். எனக்கு இரண்டு அண்ணன்கள் மற்றும் ஒரு அக்கா உள்ளார்கள். நான் கடந்த 2000 ஆம் ஆண்டு சென்னை குன்றத்தூரில் உள்ள அய்யப்பன்தாங்கலில் சொந்தமாக வீட்டு மனை வாங்கி வீடு கட்டிக்கொண்டு குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் ஆலந்தூர் குப்தா எக்ஸ்போர்ட் நிறுவனத்தில் பேட்டன் மாஸ்டராக பணிபுரிந்து வருகிறேன். எனது சொந்த ஊரான வெள்ளாத்துக்கோட்டை கிராமத்தில் எனது தந்தை திரு.கோபால் அவர்களுக்கு சொந்தமான விவசாய பட்டா நிலத்தினையும் மற்றும் வெள்ளாத்துக்கோட்டை கிராமத்தில் உள்ள கிராம நத்த வீட்டு மனையையும் அவருடைய மகன்களான எனக்கும் மற்றும் இரண்டு அண்ணன்களுக்கும் பிரித்து செட்டில்மென்ட் எழுதி கொடுத்ததை ஊத்துக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.1082/2017 மற்றும் 1083/2017 என பத்திரப்பதிவு செய்யப்பட்டது. அதன்படி மேற்படி எனது தந்தையின் பெயரில் இருந்த நிலத்தில் சர்வே எண்கள்.100/1, 100/14, 233/10, 233/12, 288/8 என மொத்தம் 76 சென்ட் விவசாய நிலமும், வெள்ளாத்துக்கோட்டை கிராம நத்த வீட்டு மனை சர்வே எண்.305/7-ல் 560 சதுர அடிகள் எனக்கு வழங்கப்பட்டது. பின்னர் எனது தந்தை மற்றும் தாய் ஆகியோர்கள் இறந்துவிட்ட காரணத்தினால் எனது தாய் திருமதி.சுசீலாம்மாள் அவர்களின் பெயரில் இருந்த விவசாய பட்டா நிலமான குடும்ப பொது சொத்தில் என்னிடமிருந்து எனது அண்ணன்கள் மற்றும் அக்கா அவர்களுடைய பாகத்திற்கு உண்டான தொகையை பெற்றுக்கொண்டு எனக்கு பொது சொத்தில் பாக உரிமை விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்து எனக்கு வழங்கினர். அதனை ஊத்துக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2300/2020 என பத்திரப்பதிவு செய்யப்பட்டது. அதன்படி எனக்கு வெள்ளாத்துக்கோட்டை கிராமத்தில்

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2021/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

விவசாய நிலம் சர்வே எண்.192/1 மற்றும் 192/2A என மொத்தம் ஒரு ஏக்கர் ஐந்து சென்ட் வழங்கப்பட்டது. மேற்படி எனது பெயருக்கு பத்திரபதிவு செய்து கொடுத்த சொத்தினை எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யவேண்டி 07.01.2021 ஆம் தேதி அய்யப்பன்தாங்கலில் உள்ள இ-சேவைமையத்தில் விண்ணப்பம் செய்ய சென்றேன். அப்போது இ-சேவை மையத்தில் இருந்தவர் எனது அம்மா திருமதி.சுசீலாம்மாள் பெயரில் இருந்து எனது பெயருக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்ட சர்வே எண்.192/1, 192/2A மட்டும் எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய மனுவினை இணையவழியில் விண்ணப்பித்துள்ளதாகவும். எனது தந்தை பெயரில் இருந்து எனது பெயருக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்ட விவசாய நிலம் மற்றும் கிராம நத்த வீட்டுமனை முதலியவற்றை தங்கள் ஊரிலே சென்று மனு கொடுக்குமாறு கூறி அனுப்பிவிட்டார். பின்னர் நான் 12.01.2021 ஆம் தேதி ஊத்துக்கோட்டை தாலுக்கா அலுவலகம் சென்று விசாரித்தபோது, பட்டா பெயர் மாற்றம் செய்ய இ-சேவை மையத்தில் தான் விண்ணப்பிக்க வேண்டும் என கூறியதால் அன்றே ஊத்துக்கோட்டையில் உள்ள இ-சேவைமையத்தில் எனது அப்பா பெயரில் இருந்த எனது பெயருக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்ட விவசாய பட்டா நிலம் சர்வே எண்.100/1, 100/14, 233/10, 233/12, 288/8-க்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய இணையவழியில் விண்ணப்பம் செய்யதேன். மேலும் எனது அப்பா பெயரில் இருந்து எனது பெயருக்கு பத்திரப்பதிவு செய்யப்பட்ட கிராம நத்த வீட்டு மனை சர்வே எண்.305/7-க்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய எழுத்து மூலமாக கிராம நிர்வாக அலுவலரிடம் மனு கொடுக்கும் படியும். மேலும் இணையவழி விண்ணப்ப நகலினையும் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய ஆவண செய்ய கோருமாறும் அறிவுருத்தி அனுப்பினர். அவ்வாறு நான் 12.01.2021 ஆம் தேதி சுமார் 12.00 மணியளவில் வெள்ளாத்துக்கோட்டை கிராமத்தில் அமைந்துள்ள கிராம நிர்வாக அலுவலகம் சென்று VAO திருமதி.மோகனபிரியா அவர்களை சந்தித்து எனது பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி இணைய வழியில் விண்ணபப்பம் செய்த தகவலினையும், அது சம்மந்தப்பட்ட நகலினையும் கொடுத்து. மேலும் எனது தந்தை திரு.கோபால் அவர்களின் பெயரில் உள்ள வெள்ளாத்துக்கோட்டை கிராம நத்த சர்வே எண்.305/7 வீட்டுமனை

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2021/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

முதலியவற்றை எனது பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய கோரியபோது. அவர் எனது அப்பா பெயரில் உள்ள கிராம நத்த வீட்டு மனைக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய மனு கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நானே மனு தயார் செய்து பட்டா பெயர் மாற்றம் செய்ய இணையவழி விண்ணப்பித்த மனுக்களுடன் சேர்த்து மேல்நடவடிக்கை எடுக்கிறேன். ஒரு மனுவிற்கு ரூ.4,000/- என மூன்று மனுவிற்கு ரூ.12,000/- கொடுக்கவேண்டும் என கூறினார். நான் அதற்கு அந்த தொகை மிக அதிகமாக இருக்கிறது என்றும். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் எனது இயலாமையை கூறியபோது. ரூ.1,000/- குறைத்துக்கொண்டு ரூ.11,000/- கொடுக்கும்படி கூறினார். மேலும். தான் பொங்கலுக்கு 10 நாட்கள் விடுப்பில் செல்வதால் 10 நாட்கள் கழித்துதான் அலுவலகத்திற்கு வருவேன் அப்போது உங்களுக்கு போன் மூலமாக தகவல் சொல்கிறேன். அப்போது நான் கேட்ட பணத்தை எடுத்து வாருங்கள் என்று கூறினார். பின்னர் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பின்னர் 25.01.2021 அன்று சுமார் 12.50 மணியளவில் என்னுடைய தொலைபேசி எண்.9941844114-க்கு VAO திருமதி.மோகனபிரியா அவர்கள் அவருடைய தொலைபேசி எண்.8015636760-லிருந்து என்னை தொடர்பு கொண்டார். நான் போனை எடுப்பதற்குள் அது கட்டாகிவிட்டது. பின்னர் நான் அவர்களை தொடர்பு கொண்டு பேசியபோது. VAO திருமதி.மோகனப்பிரியா அவர்கள் நான் விடுமுறை முடித்து வந்துவிட்டேன். நான் கேட்ட பணம் தயாராக உள்ளதா என்று கேட்டார். நான் அதற்கு அந்த தொகை மிக அதிகமாக இருக்கிறது என்றும். என்னிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் எனது இயலாமையை கூறியபோது. ரூ.1,000/- குறைத்துக்கொண்டு மூன்று மனுவிற்க்கும் சேர்த்து பணம் ரூ.10,000/- கொடுத்தால் பட்டா பெயர் மாற்றம் செய்ய மனுக்களை வட்டாச்சியருக்கு பரிந்துரைப்பேன் என்று கராராக கூறினார். எனக்கு வெள்ளாத்துக்கோட்டை VAO திருமதி.மோகனப்பிரியா அவர்கள் கேட்ட பணம் ரூ.10,000/-ம் லஞ்சமாக கொடுக்க விருப்பம் இல்லாததால். நான் இன்று 29.01.2021 காலை 08.30 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகம் வந்து இப்புகார் மனுவை அளிக்கிறேன். எனவே பட்டா பெயர் மாற்றம் செய்து தர லஞ்சம் கேட்ட VAO திருமதி.மோகனப்பிரியா மீது தக்க

**(FIR contents, continues to next page.....)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.01/AC/2021/TVL, U/s 7 of Prevention of Corruption Act 1988 as Amendment in 2018. Continuous.....)**

நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். தாங்கள் எடுக்கும் சட்டப்படி நடவடிக்கைக்கு தக்க ஒத்துழைப்பு அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒப்பம் G.மூர்த்தி) 29/01/2021.

Honoured Madam, I received the above complaint on 29.01.2021 at 08.30 hrs and after getting proper permission from DVAC on this complaint, enquiry conducted in a discreet manner. Based on the outcome of the Discreet enquiry, enmity, genuineness of the complaint and the reputation of the accused are verified. Since, there is prima-facie made out to register FIR on said complaint against the accused Tmt.Mohanapriya, Village Administrative Officer, Vellathukottai Village, Uthukottai Taluk, Thiruvallur District. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.01/AC/2021/TVL u/s 7 of The Prevention of Corruption Act 1988 (as Amendment in 2018) on 29.01.2021 at 09.30 hrs The original FIR along with complaint sent to the Hon'ble CJM cum Special Judge, Thiruvallur. Copies send to Officers concerned and took-up the investigation.

29/01/2021

INSPECTOR OF POLICE
VIGILANCE & ANTI CORRUPTION
Thiruvallur - 602 001.